# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## இலங்கை றோமன் கத்தோலிக்க அதிமேற்றிராணியார், மேற்றிராணியார் (திருத்தம்)

**இலங்கை றோமன் கத்தோலிக்க அதிமேற்றிராணியார், மேற்றிராணியார் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

---

*குருநாகல் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ நெரன்ஜன் விக்கிரமசிங்க அவர்களால் 2013, ஏப்பிறல் மாதம் 24 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2013, ஏப்பிறல் மாதம் 16 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ **236 ஆம் சட்டமூலம்** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

2-PL 007181-350 (2013/04)

## இலங்கை றோமன் கத்தோலிக்க அதிமேற்றிராணியார், மேற்றிராணியார் (திருத்தம்)

## இலங்கை றோமன் கத்தோலிக்க அதிமேற்றிராணியார், மேற்றிராணியார் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

இதுவரை திருகோணமலை றோமன் கத்தோலிக்க மேற்றிராணியாரின் சமயஞ்சார் நியாயாதிக்கத்துக்குட்பட்டதாக இருந்துவந்த இடப்பரப்பின் ஒரு பகுதி, தற்போது மட்டக்களப்பு றோமன் கத்தோலிக்க மேற்றிராசனம் என அழைக்கப்படும் புதிய மேற்றிராசனம் ஒன்றாக உருவாக்கப்பட்டிருக்கின்றதாதலாலும் அதனை நிருவகிப்பதற்கு அதிவணக்கத்திற்குரிய கலாநிதி ஜோசப் பொன்னையா அவர்கள் மட்டக்களப்பு றோமன் கத்தோலிக்க மேற்றிராணியாராக உரியமுறையில் நியமிக்கப்பட்டிருக்கின்றாராதலாலும் :

மட்டக்களப்பு றோமன் கத்தோலிக்க மேற்றிராணியாரைக் கூட்டிணைப்பதற்கும் வேறு விடயங்கள் தொடர்பிலும் இலங்கை றோமன் கத்தோலிக்க அதிமேற்றிராணியார், மேற்றிராணியார் கட்டளைச் சட்டத்தையும் திருத்துவது உசிதமானதென்பதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப்பெயர்.

**1**. இச்சட்டம், 2013 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, இலங்கை றோமன் கத்தோலிக்க அதிமேற்றிராணியார், மேற்றிராணியார் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

338 ஆம் அத்தியாயத்தில் புதிய பிரிவு 3உ என்பதனை உட்புகுத்துதல்.

**2**. (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2000 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான இலங்கை றோமன் கத்தோலிக்க அதிமேற்றிராணியார், மேற்றிராணியார் கட்டளைச் சட்டம், அதன் 3ஈ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகிறது என்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 3உ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்.

2-PL 007181 -50 (2013/04)

"மட்டக்களப்பு றோமன் கத்தோலிக்க மேற்றிராணியாரைக் கூட்டிணைத்தல்.

3உ. மட்டக்களப்பு றோமன் கத்தோலிக்க மேற்றிராணியார் அதாவது, அதிவணக்கத்திற்குரிய கலாநிதி ஜோசப் பொன்னையா அவர்களும், றோமன் கத்தோலிக்க திருச்சபையின் சட்டங்களுக்கும் வழக்காறுகளுக்கும் இணங்க உரிய முறையில் நியமிக்கப்பட்ட அவரது வழியுரிமையாளர்களும் கூட்டிணைக்கப்பட்டவொரு குழுவாகவிருத்தல் வேண்டும் என்பதுடன், இக் கட்டளைச் சட்டத்தின் எல்லா நோக்கங்களுக்காகவும் மட்டக்களப்பு றோமன் கத்தோலிக்க மேற்றிராணியார் என்னும் பெயரைக் கொண்டிருத்தல் வேண்டும் ; அத்துடன், அத்தகைய பெயர்கொண்டு இடையறாவழியுரிமை கொண்டதாகவிருத்தல் வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு விவரணத்தினதுமான அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தைக்கொள்ளவும், கொள்வனவு செய்யவும், பெறவும், வைத்திருக்கவும், துய்க்கவும் அத்துடன் அவற்றை விற்பனை செய்யவும் அல்லது வேறுவகையில் கையுதிர்க்கவும் முழுத்தத்துவம் கொண்டதாதலும் வேண்டும். அத்துடன் அத்தகைய ஆதனம் தொடர்பில் எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்."

முதன்மைச் சட்டவாக்கத்தில் 5உ என்னும் பிரிவை உட்புகுத்துதல்.

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5ஈ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன் இது அச்சட்டவாக்கத்தின் 5உ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

"மட்டக்களப்பு றோமன் கத்தோலிக்க மேற்றிராணியாருக்கு ஆதனம் உரித்தாக்கப்படுதல்.

5உ. சொல்லப்பட்ட அதிவணக்கத்திற்குரிய கலாநிதி ஜோசப் பொன்னையா அவர்களினால் அவரது உத்தியோகபூர்வ தகைமையில், ஏலவே கொள்ளப்பட்ட வைத்திருக்கப்பட்ட, உடைமை கொள்ளப்பட்ட எல்லா அசைவுள்ள, அசைவற்ற ஆதனமும், அது சம்பந்தமான ஏதேனும் நம்பிக்கைப்பொறுப்புக்கு அல்லது நிபந்தனைக்கு அமைவாக, சொல்லப்பட்ட மட்டக்களப்பு றோமன் கத்தோலிக்க மேற்றிராணியாருக்கு உரித்தாக்கப்படுவதாதல் வேண்டும்."

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**4**. 2000 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு, அப்பிரிவின் 5 ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :-

> "(6) மட்டக்களப்பு றோமன் கத்தோலிக்க மேற்றிராசனம் உருவாக்கப்பட்டவை காரணமாக, மட்டக்களப்பு றோமன் கத்தோலிக்க மேற்றிராணியாரின் நிருவாகத்திற்குட்பட்டதாக வருவதான எல்லா அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் சம்பந்தமாகவும் மட்டக்களப்பு றோமன் கத்தோலிக்க மேற்றிராணியாரின் பெயரில் திருகோணமலை மேற்றிராணியாரால் எழுதி நிறைவேற்றப்பட்ட உரித்துமாற்றல், கைமாற்றல் அல்லது சாட்டுதல் சாதனம் எதற்கும் 1982 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, முத்திரைத்தீர்வைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய சாசனத்திற்கு விதித்துரைக்கப்பட்ட முத்திரைத்தீர்வை விதிக்கப்படுவதாதல் வேண்டும்.".

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**5**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்